DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : தமிழழகன் | Father/Husband Name : சண்முகநாதன் |
| Age : 38 | Village : மதுரை |
| Taluk : | Calling : சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12 Mar 2026 16:12

(A1 Present, A2 not present. Petition under Section 317 CrPC filed and allowed)

**<u>முதல் விசாரணை</u>** :-

1. நான் மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் மதுரை மாநகர், மதிச்சியம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 11.11.2018ம் தேதி 15.30 மணிக்கு நான் சாத்தூர் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்த போது சாத்தூர் தாலுகா, சங்கராபுரம் புதுகிராமம், வடக்கு தெருவை சேர்ந்த ராஜ்குமார் மனைவி தேவி, வயது 38/2018 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைகேற்ப சாத்தூர் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.278/2018, பிரிவுகள் 286, 338 இதச உடன் இணைந்த 9B(1) (a) IE Act ஆக வழக்கு பதிவு செய்து புகார் மனுவின் அசல் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசல் ஆகியவற்றை சாத்தூர் நீதிமன்ற எண்.2க்கு அனுப்பி வைத்தேன். **<u>(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)</u>**

3. பின்னர் 17.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கமலஹாசன் மற்றும் ஜான் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் **<u>(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)</u>** பின்னர் பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அதன்பின்பு சாட்சிகள் தேவி, ஜெயராணி, கவிதா, ஜான்சி ராணி, பாக்கியம், முத்துராஜ், ரஞ்சித், நிதிஷ்குமார், ராஜ்குமார், செல்வக்குமார், ராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம்பட்ட சிகிச்சையில் இருந்த சாட்சி நிதிஷ்குமார் என்பவரை கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை தேடி சென்ற போது அவர்கள் கிடைக்காததால் தகவல் வைத்து வந்தேன். பின்னர் 12.11.2018ம் தேதி சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்து வழக்கின் சட்டப்பிரிவை 286, 338, 201 இதச உடன் இணைந்த 9B(1) (a) IE Act ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. பின்னர் 14.11.2018ம் தேதி காயம்பட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சாட்சிகள் பாலகணேஷ் மற்றும் பாண்டித்துரை ஆகியோரை தனித்தனியாக விசாரித்து அவர்களுடைய வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

பின்னர் 20.02.2019 ம் தேதி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் Crl.O.P.880/2019 பிரகாரம் முதல் எதிரி பிணையம் பெற்றார். பின்னர் 04.03.2019 ம் தேதி ஸ்ரீவில்லிபுத்தூர் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் Crl.M.P.No.709/2019 பிரகாரம் வழக்கின் 2 வது எதிரி முன்பிணையில் சென்றுள்ளார்.

6. பின்னர் 15.03.2019 ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்டு நிதிஷ்குமார், பாலகணேஷ், பாண்டித்துரை ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மருத்துவர் ராஜேஷ் கோவில்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர், மருத்துவர் கண்ணன், மருத்துவர் அதில் அகமது யாமின் திருநெல்வேலி அரசு உதவி மருத்துவர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்று காயம்பட்டவர்களுக்கு கொடுங்காயம் என்று கருத்துரை கேட்டு அன்றைய தினமே எதிரிகள் மீது அதே பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **<u>(பாண்டித்துரை என்பவருக்கு சிகிச்சை விபரக்குறிப்பு அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)</u>**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

7. இந்த வழக்கு முதல் தகவல் அறிக்கை மூன்று நாள் கழித்து கொடுக்கப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் 8 வது காலத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் குறித்து கூறவில்லை என்றால் சரிதான், புகார்தாரர் அவருடைய வாக்குமூலத்தில் அதை கூறியுள்ளார். பொதுவாக பட்டாசு விபத்து தொடர்பாக காயம் ஏற்பட்ட நபர்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக செல்லும் போது மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு உடனடியாக தகவல் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான்.

8. இந்த வழக்கு விபத்து தொடர்பாக மருத்துவமனையில் இருந்து எங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் வந்ததா என்றால் வந்தது. காவல் நிலையத்திற்கு பிரிவு 9B(1)(a) Indian Explosive Act கீழான குற்றம் நடந்ததாக தகவல் கிடைக்கப் பெற்றாலே அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய முடியும் என்றால் காயம் பட்ட நபர்கள் மயக்க நிலையில் இருந்ததாலும், அவர்களுடைய உறவினர்கள் எதிரிகளும் அவர்களுடைய உறவினர்கள் என்பதாலும் பிறகு புகார் கொடுப்பதாக கூறியதால் உடனடியாக வழக்கு பதிவு செய்யப்படவில்லை.

9. இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள புகார் மனுவில் எதிரிகள் வழக்கு சம்பவ இடத்தில் வெடி மருந்துகளை கொட்டியதாகவோ, அதை அவர் பார்த்ததாகவோ கூறவில்லை என்றால் சரியல்ல. தேவி, ஜெயராணி, கவிதா 09.11.2018 ம் தேதி ஒன்றாக வேலைக்கு சென்றதாக புகார் மனுவில் கூறவில்லை என்றால் சரிதான், வாக்குமூலத்தில் கூறினார்கள். முதல் தகவல் அறிக்கையில் காலம்–5 ல் சம்பவ இடமாக "மணி என்பவரின் குடோன் அருகில் வைத்து" என்று கூறப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கில் தயார் செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் மேற்படி மணி என்பவரின் குடோன் என்பது காண்பிக்கப்படவில்லை என்றால் மேசியா ஆட்டுப்பண்ணை என்று குறிப்பிடப்பட்டுள்ள இடம் தான் மணி என்பவரின் குடோன் ஆகும், அதுதான் ஒன்றாவது எதிரிக்கு சொந்தமான இடமாகும். அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் மேற்படி மேசியா ஆட்டுப்பண்ணையில் தான் ஒன்றாவது எதிரி மணி குடோன் வைத்து நடத்துவதாக கூறவில்லை என்றால் சரிதான். தேவி, ஜெயராணி, கவிதா ஆகிய மூவரும் என்னிடம் வழங்கிய வாக்குமூலத்தில் மேசியா

ஆட்டுப்பண்ணை உள்ள இடத்தில்தான் மணி குடோன் இருக்கிறது என்று கூறவில்லை என்றால் சரிதான்.

10. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது அங்கு மருந்துகள் சிதறி கிடந்தது என்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் நான் அங்கு சென்றபோது அவ்விதமான பொருட்கள் எதுவும் இல்லை. நான் வழக்கு புலன் விசாரணையின் போது மணி குடோனில் இருந்து பட்டாசு பொருட்கள் எதுவும் கைப்பற்றினேனா என்றால் அவர்கள் இந்த வழக்கு விபத்திற்கு பிறகு அங்கு இருந்து குடோனை காலி செய்து விட்டார்கள் என்பதால் கைப்பற்றவில்லை. நான் கூறுவது போல் வழக்கு சம்பவ இடம் அருகே வைத்து பட்டாசு பொருட்கள் எதுவும் உற்பத்தி செய்யவில்லை என்றாலும், அதனால் தான் அவைகள் இந்த வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

11. அதேபோல், என்னுடைய விசாரணையில் எதிரிகள் எங்கு இருந்து பட்டாசு செய்ய மூலப்பொருட்களை வாங்கினார்கள் என்பதும் தெரிய வரவில்லை என்றால் நான் சாட்சிகளிடம் அது தொடர்பாக விசாரித்த போது அவர்கள் தெரியவில்லை என்று கூறி விட்டார்கள். காயம் பட்ட நபர்கள் விபத்திற்கு பிறகு உப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார்களா என்பது தொடர்பாக என்னுடைய விசாரணையில் எதுவும் தெரியவந்ததா என்றால் இல்லை, அவர்கள் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார்கள் என்று தான் எங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் வந்தது. காயம் பட்ட நபர்கள் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோது அவர்களுக்காக பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டில் Accidental cracker burn while playing என்று தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல், காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளிக்கும் போது அந்த நபர்களின் காயத்தில் மருந்து பொருட்கள் இருந்ததாக எதுவும் தெரியவந்ததா என்றால் அது பற்றி மருத்துவர் எதுவும் கூறவில்லை. காயம்பட்ட நபர்களுக்கு கால் பாதத்தில் காயம் இருந்ததா என்பது என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

12. இந்த வழக்கில் கூறப்பட்டுள்ளது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள புகார் மனு வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளின் கவனக் குறைவால் காயம்பட்ட நபர்களுக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர்கள் பட்டாசு கழிவுகளை எடுத்து தீ வைக்கும் போது தான் வழக்கு விபத்து ஏற்பட்டது என்றாலும், அவர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவ இடத்திற்கு அருகே எதிரிகள் பட்டாசு எதுவும் உற்பத்தி செய்யவில்லை என்றாலும், அவர்கள் தடயங்கள் எதையும் அழிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct. 12 Mar 2026 16:48

Judicial Magistrate 2, Sattur